# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை

## யாழ்ப்பாணம் மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 12 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 யூன் 29 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 ஆகஸ்ட் 30 ஆம் திகதியும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இன் நிதிநிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையினை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 13 மயானங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்காமையினால் காணி கட்டடங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டு இறுதிக்கணக்குகளில் இவ்விடயம் சீர் செய்யப்படும். | மயானங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 13 வாகனங்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாமையினால் மோட்டார் வாகனங்களினதும் வண்டிகளினதும் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டு இறுதிக் கணக்குகளில் சேர்க்கப்படும். | வாகனங்களின்பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) ரூபா 10,830,080 ஆன பொறி இயந்திரம் மற்றும் ரூபா 6,436,106 ஆன தளபாடங்கள் ஆகியன அழிக்கப்பட்டிருந்த போதிலும் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தமையால் சொத்தின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | நடப்பாண்டு இறுதிக்கணக்குகளில் சீர்செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | அழிக்கப்பட்ட பொருட்களை சொத்திலிருந்து நீக்குவதற்கும் சரியான பெறுமதியினை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கும் உரிய நடவடிக்கை சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) ரூபா 377,451 ஆன அழிக்கப்பட்ட நூலகப்புத்தகங்கள் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையால் சொத்தின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | நடப்பாண்டு இறுதிக்கணக்குகளில் சீர்செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | அழிக்கப்பட்ட பொருட்களை சொத்திலிருந்து நீக்குவதற்கும் சரியான நூலகப்புத்தகங்களின் பெறுமதியினைநிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கும் உரிய நடவடிக்கை சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |

**1.4 இணக்கமின்மைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டின் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் உப பிரிவு 16(2) | வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நடப்பாண்டு முதல் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படும். | சட்டத்திற்கமைய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்பிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் | | | |
| (i) பிரிவு 126 (iii) (ஊ) | அனுமதியற்ற விளம்பரங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடப்பாண்டில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் . | அனுமதியற்ற விளம்பரங்கள் தொடர்பாக சட்டத்திற்கமைய உரிய நடவடிக்கைகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |
| | (ii) பிரிவு 158 (1) | ஆதனவரி நிலுவை ரூபா 17,250,619 செலுத்தத் தவறியோருக்கு பற்றாணைச்சீட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை. | பற்றாணைச்சீட்டு வழங்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | ஆதனவரி நிலுவை தொடர்பாக உரிய சட்டத்திற்கமைய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள் | | | |
| | (i) இலக்கம் 371(2)(b) | ஆராய்ச்சி அறிக்கை தொடர்பாக வழங்கப்பட்ட முற்பணம்ரூபா 1,246,860 இதுவரையும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | அறிக்கை கிடைக்கப்பெற்றதும் சீர் செய்யப்படும். | தீர்க்கப்படாத முற்பணம் தொடர்பாகநிதி ஒழுங்குவிதிக்கமைய உரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |
| | (ii) இலக்கம் 571 | 2 வருடத்திற்கு மேற்பட்ட வைப்புக்கள் ரூபா 254,520 தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | சீர் செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | தீர்வு செய்யப்படாத வைப்புக்கள் தொடர்பில் நிதிஒழுங்குவிதிக்கமைய உரிய நடவடிக்கைகள்சபையினால் உரிய காலத்தில் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை | | | |
| | 2018.01.24 ஆம் திகதிய இலக்கம் 02/2018 | மனிதவள திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் பணியாளர்களிற்கு ஓராண்டுக்கு ஆகக்குறைந்தது 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சி வழங்கப்பட்டமையினையும் உறுதிப்படுத்தப்பட முடியாதுள்ளது. | பயிற்சி வழங்குதற்கு நடவடிக்கை தொடரப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கைக்கு அமையபணியாளர்களிற்கு பயிற்சிகளை உரிய காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |

(உ) ஏனைய சுற்றறிக்கை

| | | | |
|---|---|---|---|
| (i) 2018.07.19 ஆம் திகதிய 2018/e உள்@ராட்சி - 01 ஆம் இலக்க உள்@ராட்சி சுற்றுநிருபம் | பிரசைகளுக்கு இணையத்தின் மூலமாக சேவைகளை பெறுவதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. | உள்ளுராட்சித் திணைக்களத்திற்கு அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைக்கு அமையபிரஜைகளுக்கு இணையத்தள வசதி சேவைகள் வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) 1981.12.09 ஆம் திகதிய 161 ஆம் இலக்க சுற்றுநிருபம் | தொழிநுட்ப உத்தியோகத்தர், வருமானப்பரிசோதகர், சுகாதார மேற்பார்வையாளர், சாரதி, இயந்திர இயக்குனர், நீரிறைக்கும் இயந்திர இயக்குனர், மின்னிணைப்பாளர், காரியாலய காரிய சகாயர், ஆகிய பதவிகளிலுள்ள 18 அலுவலர்களுக்கு ரூபா 26,760 இல் மழைக்கவசம் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது. | தாபன விதிக்கோவை அத்தியாயம் XXI இன் பிரிவு 3 இற்கமைய வழங்கப்பட்டிருந்தன. | சுற்றறிக்கைக்கு அமைய உத்தியோகத்தர்களுக்கு உரிய காலத்தில்மழைக்கவசம் வழங்க உரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |

### 1.4.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154 ஆம் பிரிவின் பிரகாரம், குறித்த சில காணிகள் விற்பனை மீது 1% விற்பனை வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | தரகர்கள் மற்றும் முகவர்கள் மூலமாக காணிகள் விற்கப்படுமிடத்து விற்பனை வரி அறவீடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | விற்பனை வரிகளின் அறவீட்டினை மேற்கொள்வதற்கு சட்டத்திற்கமைய உரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம்,2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 27,938,834 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 75,228,272 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2019 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 7,855,600 | 7,901,070 | 17,725,212 | 7,859,600 | 8,052,726 | 14,549,915 |
| வாடகைகள் | 11,780,161 | 17,886,020 | 280,508 | 10,233,300 | 11,928,676 | 279,758 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 3,193,450 | 3,551,475 | 7,500 | 2,930,700 | 3,476,268 | 28,500 |
| ஏனைய வருமானம் | 120,085,466 | 81,775,298 | 9,404,690 | 116,186,200 | 124,153,988 | 49,990,569 |
| | 142,914,677 | 111,113,863 | 27,417,910 | 137,209,800 | 147,611,658 | 64,848,742 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 147,611,658 ஆக இருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 111,113,863 ஆக குறைவடைந்துள்ளமையால் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2019 ஆம் ஆண்டில் வருமான சேகரிப்பின் செயலாற்றல் ரூபா 36,497,795 இனால் குறைவடைந்திருந்தது. | முத்திரைதீர்வை, நீதிமன்றத் தண்டப்பணம் அடுத்த ஆண்டுக்கான வருமானமாக கணக்கிடப்பட்டமையினால் வருமான சேகரிப்பின் செயலாற்றல் குறைவடைந்துள்ளது. | வருமான சேகரிப்பின் செயலாற்றலை அதிகரிப்பதற்குஉரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |

### 2.2.3 வீதவரி மற்றும் வரி

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வீதவரி நிலுவை ரூபா 17,250,619 இனை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை . | அறவீடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | வீதவரி நிலுவையினை உரிய காலத்தில் அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) நீர்வழங்கல் சேவைக்கட்டண நிலுவை ரூபா 73,090 இனை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நீர்வழங்கல் சேவைக்கட்டண நிலுவையினை உரிய காலத்தில் அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |

**2.2.4 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| குத்தகை நிலுவைரூபா 275,508 இனை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | குத்தகை நிலுவையினை உரிய காலத்தில் அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |

**2.2.5 நீதிமன்ற தண்டப்பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்துவரவேண்டிய 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 9,283,780 பெறப்பட வேண்டியிருந்தது. | பிரதிப்பிரதம செயலாளரால் 2020 ஆம் ஆண்டில் கோருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | நீதிமன்ற தண்டப்பண நிலுவையினைஉரிய காலத்தில அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உபவிதியின் பிரகாரம், சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 30 செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டுக்கானது தயாரிக்கப்பட்டுள்ளது. | உபவிதிக்கமையஉரிய செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிப்பதற்கு உரிய நடவடிக்கை சபையினால்எடுக்கப்படல் வேண்டும். |

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளினை அடைவதற்கு தவறியமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வாராந்த சந்தை நிர்மாணித்தலுக்கு ரூபா 880,625 ஏற்பட்டதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டை அடைந்து கொள்ளப்பட்டிருந்த போதிலும்,சந்தை 04 வருடங்களாகப் பயன்படுத்தப்பட்டிருக்காமையினால் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளினை அடைந்து கொள்ள முடியாதிருந்தது. | கட்டிடம் மாற்றுப் பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படும். | சந்தை கட்டிட நிர்மாணத்தின் மூலம் உரிய காலத்தினுள் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளினை அடைந்து கொள்வதற்கு உரிய நடவடிக்கை சபையினால்எடுக்கப்படல் வேண்டும். |

**(இ) கைவிடப்பட்ட செயற்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திண்மக் கழிவகற்றல், கொல்களம் அமைத்தல், காக்கைதீவுகொல்களம், ஆனைக்கோட்டை சிறுவர் பூங்கா ஆகிய செயற்பாடுகளின் செயலாற்றலை ஆரம்பிப்பதற்கு ரூபா 17,703,828 செலவிடப்பட்டிருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளினைப் பெற்றுக்கொள்ளாது அந்த செயற்பாடுகள் கைவிடப்பட்டிருந்தது. | திண்மக் கழிவகற்றல் பிரதேசம் இராணுவத்தினரிடமிருந்து மீளப்பெறப்பட்ட பின்பும் சிறுவர் பூங்கா அமைப்பு வேலைகள் முடிவுற்ற பின்பும் பயன்படுத்தப்படும் என்பதுடன் காக்கைதீவுகொல்களம் பயன்பாட்டுக்கு பொருத்தமற்றதாக கருதப்பட்டு செயற்படுத்தப்படவில்லை. | மூலதன வேலைத்திட்டங்கள் மூலம் உரிய செயற்பாடுகளை செயற்படுத்துவதற்கும் சொத்துக்களை பயன்படுத்துவதற்கும் உரிய நடவடிக்கைகள் சபையினால்எடுக்கப்படல் வேண்டும். |

**(ஈ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திண்மக்கழிவுகள்தரம் பிரிக்கப்படாததுடன் நாள்தோறும் சேகரிக்கப்படுகின்ற கழிவுகள் நறுக்கப்பட்டு மண்தட்டு இடப்பட்டு மூடப்பட்டிருக்கவில்லை. | அரச காணி பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்கு அமையதிண்மக்கழிவு சேகரிப்பு வினைத்திறனாகமேற்கொள்ள சபையினால் உரியநடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

(உ) சுற்றுச்சூழல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திண்மக்கழிவுகள் அகற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த பிரதேசத்தில் கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2020ஆம் ஆண்டில் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்கு அமைய வினைத்திறனாக உரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2018, 2019 இல் வழங்கப்பட்டிருந்த ரூபா 270,000 சனசமூக நிலைய மானியங்கள் தொடர்பாக இதுவரை சபையினால் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சனசமுக நிலையங்களுக்கு வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | மானியங்களினை உரிய முறையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | நிலையான வைப்பில் உள்ள நிதி ரூபா 145,315,980 இனை பயன்படுத்தி அபிவிருத்தித் திட்ட வேலைகளினை நடைமுறைப்படுத்தாது வங்கியில் வைப்பிலிடப்பட்டிருந்தது. | அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | சபை நிதியின் மூலம் அபிவிருத்தித் திட்ட வேலைகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்த உரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | கடந்த 12 தொடக்கம் 40 ஆண்டுகளுக்கு மேலாக பிரதேசத்திற்குரிய ஆதனங்களுக்கு ஆதனவரி மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆதனமீள்மதிப்பீடு நடாத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | ஆதனவரி மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கைகள் உரிய காலத்தினுள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | உள்@ராட்சி உதவியாளரினால் தயாரிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாமையினால் பிரதேச சபைக்குரிய முக்கிய பணிகள் நிறைவேற்றப்படாமல் இருந்தது. | அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | அறிக்கைகளை உரிய காலத்தில் சமர்ப்பிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | பொதுமக்கள் சேவை பட்டயத்தினை காட்சிப்படுத்தியுள்ள போதும் அதில் குறிப்பிடப்பட்டதற்கு முரணாக, மக்களுக்கு வழங்கப்பட்ட சேவைகள் காலம் தாழ்த்தியே வழங்கப்பட்டிருந்தது. | பொதுமக்கள் சேவைப் பட்டயம் தயாரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய சேவைகள் உரிய காலத்தில் வழங்கப்பட உரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | 2019 ஆம் ஆண்டில் 194 கட்டட அனுமதி விண்ணப்பங்களுக்கு குறிப்பிட்ட காலத்தில் அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை. | கட்டட அனுமதிகளை துரிதமாக வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | கட்டட அனுமதிகள்யாவும் குறிப்பிட்ட காலத்தில் வழங்கப்பட நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |
| (எ) | பொதுநூலக உபவிதியின் பிரிவு 8.6 இன் பிரகாரம் இரவல் வழங்கிய நூல்களை அங்கத்தவர் ஒருவர் மேலதிகமாக வைத்திருக்கும் நாட்களுக்கு தண்டப்பணம் செலுத்தப்பட வேண்டும் எனக்குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் தண்டம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தாமதக் கட்டணம், தண்டம் அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நூலக உபவிதியின் பிரகாரம் தண்டப்பணம் அறவிட உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஏ) | ஆதனவரி சேகரிப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்ட உத்தியோகத்தரொருவரினால் ரூபா 92,963 ஆன நிதி முறைகேடு இடம்பெற்றுள்ளமை தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | விசாரணை முடிவுறுத்தப்பட்டு அறிக்கை கிடைக்கப்பெற்றதும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும். | நிதி முறைகேடு சம்மந்தமாக விசாரணையினை உரிய காலத்தில் முடிவுறுத்தி அறிக்கை சமர்ப்பிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 11 மனிதவளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. | ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதி கோரப்பட்டுள்ளது. | பதவி வெற்றிடங்களை உரிய காலத்தில் நிரப்புவதற்குஉரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 02 அலுவலர்கள் ரூபா 265,292 இடர்கடன் நிலுவையினைச் செலுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | விசாரணை அறிக்கை கிடைக்கப்பெற்றதும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | இடர்கடன் நிலுவையினை சீர்செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் சபையினால் உரிய காலத்தில் எடுக்கப்படல் வேண்டும். |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டில் 23,115 ஆதன உரிமையாளர்களுக்கு K படிவம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 இல் K படிவம் விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சட்டத்திற்கமைய K படிவங்களினை விநியோகிப்பதற்குஉரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2013 இல் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த காக்கை தீவு சந்தைக்கடைக்கான குத்தகை ரூபா 275,508 அறவிடப்பட்டிருக்காமையினால் வழக்கு நடைபெறுகின்ற போதும் இதற்கான பொறுப்புகள் நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அந்தந்த மாதக்கணக்குகளில் செலவாக கணக்கிடப்படுகின்றது. | எதிர்பார்க்கப்படும் பொறுப்புக்களினை நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்படல் வேண்டும். |
| (இ) | கல்லுண்டாய் திண்மக்கழிவு சேகரிப்பு நிலையம் தொடர்பாக வழக்கு தொடரப்பட்டிருந்த போதும் இதற்கான பொறுப்புகள் நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | அந்தந்த மாதக்கணக்குகளில் செலவாக கணக்கிடப்படுகின்றது. | எதிர்பார்க்கப்படும் பொறுப்புக்களினை நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்படல் வேண்டும். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தவிசாளரால் பயன்படுத்தப்பட்டு வந்த பிக்கப் வாகனம் செயலாளரிடம் மீளக்கையளிக்காத போதும் கடந்த 15 வருடங்களாக இவ் வாகனத்தை மீளப் பெற்றுக் கொள்வதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனத்தினை தற்போதைய நிலையினை ஆராய்வதற்கென குழுவொன்று நியமிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | வாகனத்தை மீளப் பெற்றுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் சபையினால் உரிய காலத்தினுள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) ரூபா 13,775,306 ஆன 12 ஆதனங்கள் நாளதுவரை சபைக்கு உரித்தாக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு உரித்தாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சபையினால் ஆதன உரிமையை மாற்றுவதற்கு நடவடிக்கைகள் உரிய காலத்தில் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.5.2 விளைவற்ற சொத்து

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நேரடிப் பரீட்சிப்பின் போது 02 பவுசர் வாகனங்கள் உக்கி பாவனைக்கு உதவாத நிலையில் காணப்படுகின்றது. | ஒரு வாகனம் உரிமை மாற்ற விண்ணப்பிக்கப்பட்டுள்ளதுடன் மற்றைய வாகனம் ஏலத்தில் விற்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | பாவனைக்கு உதவாத சொத்துக்கள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் சபையினால்எடுக்கப்படல் வேண்டும். |

### 3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நீச்சல் தடாகம் அமைப்பதற்காக மைதானம் பார்வையிட வந்தவர்களுக்கான உபசரணைச் செலவாக ரூபா 98,083 செலவிடப்பட்டிருந்தமை சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கலாக அடையாளம் காணப்பட்டிருந்தது. | இனிவருங்காலங்களில் கொடுப்பனவுகளில் சிக்கனத்தன்மை பேண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சிக்கனமான செலவுகளினை மேற்கொள்ளஉரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீண்டுவரும் செலவினங்களினது உண்மையான செலவிற்கும் பாதீட்டு செலவிற்கும் இடையே கணிசத்தன்மையான வேறுபாடுகள் காணப்படுவதால் இப்பாதீடு ஒரு வினைத்திறனற்ற பாதீடாக காணப்பட்டிருந்தது. | இனிவருங்காலங்களில் பாதீட்டினை வினைத்திறனாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பாதீட்டினை உரிய முறையில் சரியாக திட்டமிடுவதற்கான உரிய நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். |